# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

செப்டம்பர் - SEPTEMBER
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3
பெண்கள் பகுதி 7
வாலிபர் பகுதி 8
சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசு வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை கர்த்தருக்கு உகந்தவர்களாய் மாற்றும்
உன்னதமான வார்த்தை

YouTube
**@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

- P.C. பிலேமோன் ராஜா



# பாபேல் கோபுரம்
## Tower of Babel

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

செப்டம்பர் மாதம் 1ம் தேதியை நமது இந்திய தேசத்தில் பொறியாளர்கள் (Engineers) தினமாக அனுசரிக்கின்றனர். இந்த உலகத்தில் முதன் முதலில் பிரமாண்டமாக ஒரு பெரிய கோபுரத்தினை கட்டின பொறியாளர்களிடமிருந்தும் உதவியாயிருந்த மக்களிடமிருந்தும், இந்த மாதத்திற்கான பாடங்களை கற்றுக்கொள்வோம்.

### 1. உங்களுக்கான தெய்வீக திட்டத்தினை உடைக்க வேண்டாம்:

ஆதியாகமம் 9:1 பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்.

பாபேல் கோபுரத்தின் நிகழ்ச்சியிலிருந்து நாம் கற்கின்ற முதல் பாடம், நமக்கான தெய்வீக திட்டத்தினை உடைக்க வேண்டாம் என்பதாகும். நோவாவிற்கும், அவன் சந்ததிக்கும் கர்த்தர் கொடுத்த மிக முக்கியமான கட்டளை பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்பதாகும். முதல் மனுஷர்களாகிய ஆதாம், ஏவாளிற்கும் இந்த கட்டளைக் கொடுக்கப்பட்டிருந்தது (ஆதியாகமம் 1:28). ஆனால், இங்கே நோவாவின் சந்ததியார் தேவ கட்டளையை மீறி, அந்த தெய்வீகத் திட்டத்தினை உடைக்க முயலுகின்றனர்.

ஆதியாகமம் 11:4 பின்னும் அவர்கள்: நாம் பூமியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்.

நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடி ஒரு பட்டணத்தினையும், கோபுரத்தினையும் கட்டுவோம் என திட்டமிட்டு கட்டுகின்றனர்.

அவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டாம், கூடாது என்பது அல்ல, அதற்காக அவர்கள் ஒற்றுமையும் இங்கே குலைக்கபடவில்லை. ஏனெனில் கர்த்தர் கலகத்திற்கு காரணமாயிராமல், சமாதானத்திற்கே காரணராயிருக்கின்றார் (1கொரிந்தியர் 14:33). அவர்களது முயற்சி கர்த்தருடைய சித்தத்தினை உடைப்பதாக இருந்தபடியினால், கர்த்தர் அங்கே அவர்களைப் பிரிந்துபோகச் செய்கின்றார் (ஆதியாகமம் 11:8).

கர்த்தர் நம்மை படைத்த நோக்கத்தினை, நமது ஐக்கியம் பாழாக்கும் என்றால், அப்படிபட்ட ஐக்கியம் ஆபத்தானது (1கொரிந்தியர் 15:33; ஆதியாகமம் 3:1-8). நம்முடைய ஐக்கியம், உறவு, தோழமைகள் தெய்வீக திட்டத்தினை உடைப்பதாக இருந்தால், அவர்களைவிட்டு நாம் விலகுவதே ஞானமான செயலாகும் (எஸ்றா 10:11; 2 பேதுரு 3:15-17).

இன்றைய நாட்களில், தேவ கட்டளையை மீறி, அவருடைய திட்டத்தினை உடைப்பது, கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் சாதாரணமான ஒன்றாகிவிட்டது. உதாரணமாக, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமில்லை, ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமில்லை என்று நன்கு அறிந்த போதிலும், இருளின் பிள்ளைகளை தங்கள் வாழ்வின் துணையாக தேர்வு செய்கின்றனர் (2கொரிந்தியர் 6:14). தகாத உறவைத்தவிர திருமண முறிவு செய்யக்கூடாது என்றபோதிலும், மிகவும் அற்பமான காரியங்களுக்காக பிரிந்து செல்கின்றனர் மற்றும் வாழ்கின்றனர் (மத்தேயு 19:9; 1கொரிந்தியர் 7:27). இந்த அழிந்து போகின்ற உலகத்திற்காக, சபைக்கடுத்த காரியங்களை புறக்கணிக்கின்றனர் (எபிரெயர் 10:25). இப்படி நிறைய உதாரணங்களை நாம் பார்க்க முடியும்.

நாம் நமக்கான தேவத்திட்டத்தினை உடைப்பது என்பது, கர்த்தரை நம் வாழ்வில் செயல்படவிடாமல் தடுப்பதாக இருக்கின்றது மற்றும் அவரை நமக்கு எதிராக செயல்படவும் செய்வதாக இருக்கின்றது. அதுதான் பாபேலில் ஏறக்குறைய 4100 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இன்றும் ஒருவரோ அல்லது ஒரு கூட்டமோ இணைந்து தேவ திட்டத்தினை உடைக்க முற்பட்டால், அன்று நடந்ததே இன்றும் நடக்கும். விளைவுகள் அதனைவிட கடுமையானதாகவும் இருக்கும் (லூக்கா 20:17,18; 1கொரிந்தியர் 3:17) என்று பைபிள் எச்சரிக்கின்றது. ஆகையால், அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரவான்களாக நடப்போம் மற்றும் நம்மைப் படைத்த நோக்கத்தினை நிறைவேற்றுவோம்.

## 2. பெருமை உங்களை ஆள இடமளிக்க வேண்டாம்:

ஆதியாகமம் 11:4 பின்னும் அவர்கள்: நாம் பூமியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.

பாபேல் கோபுரத்தின் நிகழ்ச்சியிலிருந்து, நாம் கற்கின்ற அடுத்த பாடம் பெருமை நம்மை ஆள இடமளிக்க வேண்டாம் என்பதாகும். பாபேல் கோபுரத்தினை, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் என தங்கள் பெருமைக்காக கட்டினார்கள் என்று நாம் அறிய முடிகின்றது. பெருமை என்ற குணம் எப்பொழுதும் கர்த்தருக்கு எதிரானது, கர்த்தரும் பெருமைக்கு எதிரானவர் என்பதனை நாம் அறிவோம் (யாக்கோபு 4:6).

பெருமையானவர்கள் கர்த்தரை தங்களுக்கு எதிரியாக்குகின்றனர் மற்றும் கர்த்தருடைய கிருபையை பெறுவதினையும் இழக்கின்றனர். இது மிகவும் கொடுமையானதாகும். ஆகையால், மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் என ஆவியானவர், பேதுருவின் மூலம் ஆலோசனை மற்றும் எச்சரிக்கை கொடுக்கின்றார். 1பேதுரு 5:5 அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

பைபிள், நம்மை வீண் பெருமைக்காக ஒன்றையும் செய்யாதிருங்கள் என்கின்றது (பிலிப்பியர் 2:3). ஆனால், இங்கே இவர்கள் தங்கள் பெருமைக்காக கோபுரத்தினை கட்டினர். அது அவர்களுக்கு வாய்க்கவில்லை. முழு உலகத்தினையும் ஆண்ட பாபிலோனிய பேரரசின் மாமன்னன் நேபுகாத்நேச்சர் உலக அதிசயமாக கருதப்பட்ட தொங்கும் தோட்டத்தினை பாபிலோனில் கட்டிய பின்பு, நான் கட்டிய மகா பாபிலோன் அல்லவா! என சொல்லும் முன்பே, மிருகத்தினை போல புல்லை உண்கின்றவராகவும், தலைமுடியும், நகங்களும் பறவைகளைப்போல உடையவராக, மிகவும் அருவெறுக்கத்தக்க தோற்றத்திற்கு மாறினார் (தானியேல் 4:29-33). அவரது பெருமையின் விளைவாக இந்த தண்டனை அவருக்கு கர்த்தராலே தரப்பட்டது.

நம் கைகளில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தால், அதனை தாழ்மையுடன் சேவையாக, நமக்கு நியமிக்கப்பட்ட அதிகாரத்திலுள்ள வேலைகளை செய்யும்போது, நாம் கிருபையுள்ளவர்களாக இருப்போம். மாறாக, உன்னதமான பிதாவானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை என்பதனை மறந்து, அதிகார செருக்கோடு நடந்தால், தேவ கோபத்திற்கும், தண்டனைக்கும் உள்ளாவோம் என்பது நிச்சயம் (ஏசாயா 13:11, செப்பனியா 2:8-10). ஆகையால், தாழ்மையுள்ளவர்களாக இருந்து, கிருபையை பெற்றுக்கொள்வோம்.

## 3. கர்த்தருடைய பார்வைக்கு எதையும் மறைக்க முடியாது:

ஆதியாகமம் 11:5 மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார்.

பாபேல் கோபுரத்தின் நிகழ்ச்சியிலிருந்து, நாம் கற்கின்ற அடுத்த பாடம், கர்த்தருடைய பார்வைக்கு

எதையும் மறைக்க முடியாது என்பதாகும். ஆம்! கர்த்தர் இப்பிரபஞ்ச குடிகள் அனைவரையும், அவர்கள் செய்யும் சகலத்தினையும் கவனித்துக் கொண்டிருக்கின்றார். அவருடைய பார்வையிலிருந்து ஒன்றையும் மறைக்க முடியாது. ஆகையால் நாம் அதனை செய்ய முயற்சி செய்ய வேண்டாம். மனுக்குலத்திற்கே தகப்பனாகிய ஆதாமும், தாயாகிய ஏவாளும் அதனை செய்து தோற்றுப்போயினர் (ஆதியாகமம் 3:1-10). அவர்களுடைய மூத்த மகனாகிய காயீனும், அவ்வாறே செய்து தோற்றுப்போனான் (ஆதியாகமம் 4:11-10).

கர்த்தரிடத்தில் ஒன்றையும் மறைக்க முடியாது என்பதனை அக்கால மக்களுக்கு உணர்த்தும்படியாக, ஏசாயா தீர்க்கதரிசி கால் நீட்டப் படுக்கையின் நீளம்போதாது, மூடிக்கொள்ளப் போர்வையின் அகலமும் போதாது. (ஏசாயா 28:20) என்கின்றார். நாமும் மறைக்க முடியாது, ஆகையால் அவ்வாறு செய்ய முயல வேண்டாம். எபிரெயர் 4:13 அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

கர்த்தர் எங்கும் நிறைந்திருக்கின்றார். அவர் எல்லாவற்றிலும் இல்லை, மாறாக எல்லா இடத்திலும் இருக்கின்றார். அதேபோல அவர் எல்லாம் அறிந்தவராகவும் இருக்கின்றார். சங்கீதம் 139:7-12 உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது. இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும். உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

அவருக்கு மறைவாக நாம் எங்கும் செல்ல முடியாது மற்றும் எதனையும் செய்யவும் முடியாது. ஆகையால், அவருக்கு முன்பாக உத்தமமாக வாழ்வோம் (ஆதியாகமம் 17:1).

## 4. கர்த்தரோடு போராடி மேற்கொள்ள முடியாது:

ஆதியாகமம் 11:6-8 அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள். இப்பொழுதும் தாங்கள்செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்.

பாபேல் கோபுரத்தின் நிகழ்ச்சியிலிருந்து, நாம் கற்கின்ற அடுத்த பாடம், கர்த்தருடைய சித்தத்திற்கு


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

எதிராக செயல்பட்டு, கர்த்தரோடு போராடி மேற்கொள்ள முடியாது என்பதாகும். கர்த்தரை மீறி எதுவும் செய்ய முடியாது என்பதனை மறக்க வேண்டாம். ஏனெனில் அவர் செய்ய நினைத்தது மாத்திரம்தான் தடைபடாது (யோபு 42:2, ஆதியாகமம் 11:9) அவர் சொல்வது மாத்திரமே நடக்கும் மற்றும் நிற்கும் (சங்கீதம் 33:9).

மேலும், கர்த்தரே எல்லாவற்றையும் ஆளுகின்றார். நம்மை மாத்திரமல்ல, இந்த அண்டம் முழுவதினையும் ஆளும் ஏக சக்கராதிபதி அவர் என்பதனை நினைவில் கொள்வோம். 1தீமோத்தேயு 6:15,16 அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர். அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

முதல் நூற்றாண்டில் யூத மத தலைவர்கள், கிறிஸ்துவிற்கும் அவருடைய ராஜ்ஜியமாகிய சபைக்கும் விரோதமாக கலகம் செய்தபோது, சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல், அவர்களை நோக்கி, தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்று எச்சரித்தார் (அப்போஸ்தலர் 5:35-39).

நாம் அனைவரும் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் மற்றும் அவருடைய கைக்குள்ளான ஆடுகளாக இருக்கின்றோம். (சங்கீதம் 95:7; எசேக்கியேல் 34:31). நாம் அவரை உண்டாக்கவில்லை, அவரே நம்மைப் படைத்தவர் (சங்கீதம் 100:3). ஆகையால், அவருக்குப் பயந்து, கீழ்ப்படிந்து, அடங்கி வாழ்வோம் (1பேதுரு 5:6).

பிரியமானவர்களே! பாபேல் கோபுரக் கட்டுமான வரலாற்று பதிவு, நம் வாழ்விற்கு தேவையான நான்கு எச்சரிக்கையின் செய்தியினை தந்திருக்கின்றது. அந்த தேவ எச்சரிப்பின் சத்தத்திற்கு அடிபணிந்து நடப்போம். தேவகோபம் மற்றும் தண்டனைக்கு விலகி, தேவ கிருபை மற்றும் தயவை சுதந்தரித்துக் கொள்வோம். கர்த்தர் தாமே, நமது இந்த தெய்வீக முயற்சியில் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

– அன்புடன், ஆசிரியர்

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**
**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# தேவகிருபை

## நமது வேதாகமத்தில் குறித்துக் கொள்வோம்



- Sis. Emily Fisher

பிரியமானவர்களே! அன்பர் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

வேதாகமத்தில் சொல்லப்படும் கிருபை என்றால் என்ன? தங்கள் வேதாகமத்தை படிக்கும்போது ஒவ்வொரு பகுதியின் ஒட்டுமொத்த முடிவையும் படியுங்கள்.

★ "கிருபை (ஆதி. 6:8,9)" இதை உங்கள் வேதாகமத்தின் முன்பக்கத்தில் எழுதுங்கள், அதன்பின் அங்கு கவனியுங்கள், "கீழ்படிதலினாலே நோவா கிருபையை அடைந்தார்" (யாத். 33:17)

★ "கிருபை என்பது யாத்திராகமத்தில் இஸ்ரவேல் மக்களின் வரலாறு முழுவதிலும் காண முடியும் (எஸ்றா 9:8; எரே. 31:2; சகரியா 12:10)"

★ சகரியாவை நாம் கவனித்துப் பார்த்தால் "கிருபை தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது (2 பேதுரு 1:10-12) கிருபையின் ஆவி = கிறிஸ்துவின் ஆவியாகும் (யோவான் 1:18-20)"

★ யோவான் 1-ல் "கிருபை என்பது இயேசு கிறிஸ்து மூலமாக கிடைக்கிறது. (1 கொரி. 1:4; ரோமர் 13:24; 1 தீமோ. 1:14 2 தீமோ. 1:9; 2:1; அப். 15:9,11)"

★ அப்போஸ்தலர் 15-ஐ திருப்பிப் பார்த்து எழுத வேண்டியது "எல்லோரும் ஒரே முறையில் இரட்சிக்கப்பட்டதால் எல்லோருக்கும் கிருபை" (அப். 14:3).

★ கிருபையின் வார்த்தையை கேளுங்கள் (அப். 18:27), இங்கு எழுதுங்கள், பாருங்கள் (அப். 11:21-24).

★ அப். 11ல் மக்கள் விசுவாசித்து தேவனிடம் மனந்திரும்பும்போது அங்கு கிருபையை காண முடியும் (ரோமர் 5).

★ இங்கே கிருபை விசுவாசத்தால் அணுகப் படுகிறது என்பதை கவனியுங்கள் (ரோமர் 6:1-3).

(தொடர்ச்சி... ௧௰ பக்கம்)

## அறிந்து கொள்வோம்

### மாதம் ஒரு "பூ" பகன்றை



பகன்றை அல்லது கிலுகிலுப்பைன் (Crotalaria verrucosa) வெண்ணிற மலர். கருவிளை என்பது இதைப் போன்று நீல நிறத்தில் பூக்கும் மலர். பகன்றைக் கொடி கொழுகொழுப்பாகச் செந்நிறம் கொண்டிருக்கும். மகளிரும் மைந்தரும் பகன்றை மலரைக் கண்ணியாகக் கட்டித் தலையில் சூடிக்கொள்வர்.

பகன்றை மலர் பற்றிச் சங்கப் பாடல்கள் தரும் செய்திகள் சுவையானவை.

**மலரின் தோற்றம்:**

பகன்றை மலர் பால்மதி போல் வெண்ணிறம் கொண்டது.

பகன்றை வெண்ணிறம் கொண்டது. கருவிளை இதைப் போலவே நீல நிறம் கொண்டிருக்கும்.

பகன்றைக்கொடி கொழுத்து வளரும்.

பகன்றைக்கொடி சிவப்பாக இருக்கும்.

பெரிய இலைகளுடன் கிண்ணத்தில் வைத்திருக்கும் நுரைத்த பால் போலப் பூக்கும்,

★ கிருபையானது நம்மை பாவத்திற்கு மரிக்க வைத்து கிறிஸ்துவின் மரணத்திற்குள் மூழ்கடிக்க வழிவகுக்கிறது (தீத்து 2:11 - 3:7).

★ தீத்து எழுதுகையில் "கிருபை நமக்கு எப்படி வாழ வேண்டும்" என்று கற்றுக் கொடுக்கிறது (1கொரி. 8:9).

★ இங்கே கவனிக்கவும் மிகுதியான கிருபை என்பது நமது செயல்களில் காணப்படுகிறது. (எபே. 4:29; கொலோ. 3:16; 1பேதுரு 4:8-11; பி. 12:15)

★ எபிரெயரில் குறிக்கவும், கிருபையிலிருந்து விலகி விடாதிருங்கள், அதை விட்டு விடாதீர்கள் (கலா. 2:21) கிருபையை வீணாக்காதீர்கள் (1 கொரி. 6:1; கலா. 5:4; 1 பேதுரு 5:12).

★ கிருபையில் நிலைத்திருங்கள் (அப். 13:43; 2 பேதுரு 2:18).

★ 2 பேதுருவில் குறித்து வையுங்கள், "கிருபையில் வளருங்கள்" (அப். 20:32).


★ கிருபை நமக்கு நம்பிக்கை கொடுக்கிறது (1தெச. 2:16; எபி. 4:16).

★ கிறிஸ்துவினாலே நாம் சிம்மாசனத்தில் கிருபையைக் காண்கிறோம் (2 கொரி. 4:15).

தமிழாக்கம்: சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

வாலிபர் பகுதி...

# உபதேசம் & உடன்படிக்கை குறித்த கேள்விகள்



- Bro. Shane Fisher

"உபதேசம் & உடன்படிக்கை" என்ற புத்தகம் பரிசுத்த வேதாகமத்தின்படி கொடுக்கப்பட்டதுபோல தேவனால் கொடுக்கப்பட்ட புத்தகம் என்று (லேட்டர் -டே செயின்ட்ஸ்) பிற்கால பரிசுத்தவான்கள் என்ற நாமகரண கூட்டத்தார் போதிக்கிறார்கள்.

நாம் பெரோயா சபையைப் போலல் அவர்கள் கூற்று சரியா அல்லது தவறா? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும், (அப். 17:10-12). நான் அதை பலமுறை படித்திருக்கின்றேன், பிற்கால பரிசுத்தவான்கள் சபையாரிடம் குறித்து கேட்க வேண்டிய சில கேள்விகள் எனக்கு இருக்கின்றது. இந்த கேள்விகளின் பட்டியல் எதிர்காலத்தில் இவர்களை சுவிசேஷத்திற்கு வழிநடத்துவது உபயோகமாய் இருக்கும் என்று நம்புகிறேன். (யோவான் 8:31,32). இந்த தலைப்பில் இது முதல் கட்டுரை. தேவனுக்கு சித்தமானால் எதிர்காலத்தில் இன்னும் சில கேள்விகளை பார்க்கலாம்.

## மல்கியாவின் தீர்க்கதரிசனம், உபதேசம்:

D&C 2 மோரோனி என்ற தேவதூதன் பொன் தகடு இருக்கின்ற இடத்தை ஜோசப் சிமித்திடம் வெளிப்படுத்தினான். "இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்தில் எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" (மல்கியா 4:5,6).

மல்கியா 4:5,6 வசன பகுதி யோவான்ஸ்நானன் மூலமாய் நிறைவடைந்த நிலையில் செப்டம்பர் மாதம் 21, 1820ஆம் ஆண்டில் இது நிறைவடையவில்லை என்று மொரோனி ஜோசப் சிமித்திடம் ஏன் சொன்னான்?

முதலாவது, மல்கியா தீர்க்கதரிசி சொன்ன எலியா போல வருகிறவன் யோவான்ஸ்நானன் என்று இயேசு மத்தேயு 11:1-15-ல் தெளிவாகக் கூறினார். இரண்டாவது, எலியா ஏற்கனவே வந்தாயிற்று என தன் சீஷர்களுக்கு இயேசு மத்தேயு 17:1-13 இல் கூறுகிறார்.

மூன்றாவது, யோவான் ஸ்நானனை தன் பிள்ளையாக பெற்றெடுக்கப் போகிற சகரியாவை பார்த்து தேவதூதன் ''பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன்

எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.'' (லூக்கா 1:13-17).

தூதர்களும் அவர்கள் கொண்டுவரும் செய்திகளும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட செய்திகளுடன் ஒத்துப்போக வேண்டும் (உபாகமம் 13:1-5; 18:15-22). தேவனுடைய அதிகாரத்தினால் ஜோசப் சிமித்தை சந்தித்ததாக சொல்லப்படுகிற மொரோனி தூதனின் செய்தி தேவனால் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்களான மத்தேயு, காபிரியில், லூக்கா மற்றும் இயேசு கிறிஸ்துவின் செய்திகளோடு ஒத்துப் போகவில்லை (மத்தேயு 11:1-14; 17:10-13). ஆகையால் மொரோனி தூதனும் அவன் செய்தியும் தேவனிடத்தில் இருந்து வரவில்லை.

## தொலைந்து போன வாக்கியம் உபதேசம்:

D&C 3-ல் வரலாற்று சூழல் உரைப்பதாவது தொலைந்துபோன லேகியின் புத்தகம் என்று அழைக்கப்படும் மோர்மோன் புத்தகத்தின் முதல் பகுதியில் தொலைந்து போன நூற்றுபதினோரு பக்கங்களை குறித்து ஜோசப் சிமித் என்னும் தீர்க்கதரிசிக்கு பென்சில்வேனியாவில் உள்ள ஆர்மோனி பகுதியில் 1988 ஆம் ஆண்டு ஜுலையில் வெளிப்படுத்தப்பட்டது. இந்த தீர்க்கதரிசி இந்தப் பக்கங்களை மார்ட்டின் ஆரிஸ் என்பவரிடத்தில் விருப்பமில்லாமல் கொடுத்தார். மாட்டின் ஆரிஸ் மோர்மோன் புத்தகத்தின் மொழிபெயர்ப்பில் கொஞ்ச காலம் எழுத்தாளர் பணியாற்றினார். இந்த வெளிப்பாடு ஊரிம், தும்மீன் மூலம் வழங்கப்பட்டது.

இந்த தொலைந்துபோன கையெழுத்துப் பிரதி குறித்து D&C 10ல் மீண்டும் பேசப்படுகிறது, தொலைந்துபோனதை மீண்டும் மொழியாக்க வேண்டாம் என்று தெய்வீக மறுப்பு கொடுக்கப்பட்டதை கவனியுங்கள். (D&C 10:31-33).

ஏனென்றால் அவர்கள் (கையெழுத்து பிரதியை திருடியவர்கள்) அந்த வார்த்தைகளுக்கு எதிராக பொய் சொல்ல, தங்கள் தீய நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. அதே வார்த்தையை நீங்கள் மறுபடியும் கொண்டு வந்தால் நீங்கள் பொய் சொன்னீர்கள் என்று மொழிபெயர்த்ததுபோலவும், நடித்ததாகவும் சொல்லுவார்கள். அவர்கள் அதை வெளியிடுவார்கள். சாத்தான் அவர்கள் இருதயத்தை கடினப்படுத்தி என் வார்த்தைகளை நம்பாதபடிக்கு உங்களுக்கு எதிராக அவர்களை கோபப்படுத்துவான்.


தேவனுடைய வார்த்தை அழிக்கப்பட்டதாக (தொலைந்துபோன) வேதாகமத்தில் ஒரு வரலாறு எரேமியா 36-ல் ஒரு சுருள் ராஜாவின் கையில் கொடுக்கப்பட்டது என்று அது சொன்னது. அதில் உள்ளதை ராஜா விரும்பவில்லை. ஆகையால் அவர் அதை கத்தியால் வெட்டி, நெருப்பில் எறிந்தார். அந்த வார்த்தையை தேவனால் மறுபடியும் உருவாக்க முடியவில்லை.

“ராஜா அந்தச் சுருளையும், அதிலே எரேமியாவின் வாய் சொல்லப் பாருக்கு எழுதியிருந்த வார்த்தைகளையும் சுட்டெரித்தபின்பு, எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ திரும்ப வேறொரு சுருளை எடுத்து, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் சுட்டெரித்த முதலாம் சுருளிலிருந்த முந்தின வார்த்தைகளை யெல்லாம் அதிலே எழுது என்றார். மேலும் நீ யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை நோக்கி: பாபிலோன் ராஜா நிச்சயமாய் வருவான் என்பதையும், அவன் இந்தத் தேசத்தை அழித்து அதிலிருந்து மனுஷரையும் மிருகங்களையும் ஒழியப்பண்ணுவான் என்பதையும் நீ அதில் எழுதினதென்று சொல்லி, அந்தச் சுருளை நீ சுட்டெரித்தாயே என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமைக் குறித்து: தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்; அவனுடைய பிரேதமோவென்றால், பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்து விடப்பட்டுக்கிடக்கும். நான் அவனிடத்திலும், அவன் சந்ததியினிடத்திலும், அவன் பிரபுக்களினிடத்திலும் அவர்கள் அக்கிரமத்தை விசாரித்து, அவன்மேலும் எருசலேமின் குடிகள்மேலும், யூதா மனுஷர்மேலும், நான் அவர்களுக்குச் சொன்னதும், அவர்கள் கேளாமற்போனதுமான தீங்கனைத்தையும் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார். அப்பொழுது எரேமியா வேறொரு சுருளை எடுத்து, அதை நேரியாவின் குமாரனாகிய பாருக்கு என்னும் சம்பிரதியினிடத்தில்

கொடுத்தான்; அவன் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அக்கினியால் சுட்டெரித்த புத்தகத்தின் வார்த்தைகளையெல்லாம், அதிலே எரேமியாவின் வாய் சொல்ல எழுதினான்; இன்னும் அவைகளுக்கொத்த அநேகம் வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டது.'' எரேமியா 36:27-32

யோயாக்கீம் அதை வெட்டி தீயில் எரிந்தாலும், அந்த வார்த்தை மறுபடியும் உருவாக்கப்பட்டது. எரேமியா தேவனின் மெய்யான தீர்க்கதரிசியாக இருந்ததால் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் மறுபடியும் உருவாக்கினார். (எல்.டி எலின் தேவன்) வேதாகமத்தின் தேவனாக இருந்தால், அவனும், சிமித்தும் அதை மொழியாக்க எந்த பிரச்சனையும் இல்லை.

– தமிழாக்கம்: சகோ. **கேமிலஸ்**




## பொதுவான செய்திகள்

### இந்தியாவின் முதல் அச்சகம் மற்றும் அது இப்போது இருக்கும் இடம் பற்றிய அனைத்தும்:

16 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோவாவில் போர்த்துகீசியர்களால் அச்சு தொழில்நுட்பம் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டாலும், 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், தற்போது தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒரு கடற்கரை நகரமான தரங்கம்பாடியில் டேனிஷ் - ஹாலே மிஷனின் முயற்சிகளால் அது மறுமலர்ச்சி கண்டது. டேனிஷ் குடியிருப்புகளில் மார்க்க சேவைகளுக்கு லூத்தரன் பாதிரியார்கள் இருப்பதை உறுதி செய்வதற்காக, டென்மார்க்கின் மன்னர் நான்காம் ஃபிரடெரிக், கிழக்கு ஜெர்மனியில் உள்ள ஹாலேவிலிருந்து பியடிஸ்டுகளை 1705 ஆம் ஆண்டில் தரங்கம்பாடிக்கு (அப்போது டிரான்க்யூபார் என்று அழைக்கப்பட்டது) பாதிரியார்கள் அனுப்ப அழைத்தார்.

ஹாலே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இறையியல் மாணவரான பார்த்தலோமஸ் சீகன்பால்க், டிரான்குபாருக்கான டேனிஷ்-ஹாலே மிஷனில் சேர்ந்து ஜூலை 9, 1706 அன்று கடல் வழியாக வந்தார். இது இந்தியாவில் முதல் புராட்டஸ்டன்ட் மிஷனரியின் வருகையைக் குறித்தது. உள்ளூர் மக்களுடன் தொடர்புகொள்ள சீகன்பால்க் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கண்டறிந்தார்.

– தொடரும்...

சிறுவர் பகுதி

# தீமைக்கு நன்மை செய்த தாவீது



மழலைச் செல்லங்களா! மீண்டும் இந்த மாதம் நான் உங்களோடு பேசுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இஸ்ரயேல் என்னும் நாட்டில் தாவீது என்னும் பேர்கொண்ட நல்ல மனிதர் வாழ்ந்தார். அவர் கர்த்தரை அதிகமாக நேசித்தார். நீதியையும், நியாயத்தையும் மிகவும் விரும்பினார். எளியோரை அன்புடன் கவனித்தார். ஆனால் அவருடைய வாழ்க்கையில் நேரிட்டதோ தீமையையும், துன்பமும் கொண்ட செயல்கள்.

ஆம் குட்டிச் செல்லங்களே! தாவீதுக்கு எதிரியாக ஒருவர் இருந்தார். அவர் பெயர் சவுல், இவர் இஸ்ரயேல் நாட்டின் அரசன். தாவீதை கண்டு அஞ்சி அவரைக் கொல்ல பலமுறை முயன்றார். தாவீது என்பவர் சவுல் அரசனால் மிகவும் பாதிக்கப்பட்டவராய் மலைகளிலும் மிருகங்கள் வாழும் இடத்திலும் போய் ஒளிந்து கொண்டார். உணவு இல்லாமல் குடிக்க தண்ணீர் இல்லாமல் மிகவும் வேதனைப்பட்டார். ஆனால் கர்த்தர் தாவீது என்பவரோடு கூட இருந்து எல்லா நேரங்களிலும் எதிரியான சவுலின் கைக்கு தப்புவித்தார். ஒருநாள் சவுல் ஒரு குகையில் ஓய்வெடுக்கும் போது தாவீது சவுலை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது தாவீதின் படை வீரர்கள் சவுலை கொன்று விடலாம் என்றனர். ஆனால் தாவீது சவுலின் உடலைத் தொடாமல் அவரது ஆடையின் ஓரத்தை வெட்டி எடுத்துக் கொண்டார். அதற்கு பின்னர் தாவீது சவுலிடம் சென்று, தான் அவருக்கு தீமை செய்யவில்லை என்றும் அவருடைய உயிரை காப்பாற்றியதை விளக்கிக் கூறினார்.

அதாவது நான் உமக்கு என்ன தீமை செய்தேன்? நான் யாருக்கும் எந்த அநியாயமும் செய்யவில்லையே? என்னை ஏன் கொன்றுப்போட நினைக்கிறீர் நான் செய்த தவறு என்ன? நான் உன்னை கொன்றுபோட வாய்ப்புகள் இருந்தும் நான் அதைச் செய்யவில்லை. கர்த்தர் இஸ்ரயேல் நாட்டிற்கு அரசனாக முடிசூட்டினவரை, நான் எவ்வாறு கொல்ல முடியும்? அது கர்த்தருக்கு விரோதமான செயல் என்று நினைத்தேன் என்று சவுலிடம் கூறினார்.

பிள்ளைகளே, சற்று கவனியுங்கள்! தீமைக்கு நன்மை செய்த தாவீது தன்னைக் கொல்ல முயன்ற மன்னர் சவுலை மன்னித்து, அவரிடம் நன்மை செய்ததையே குறிக்கிறது. தாவீது என்பவரின் இந்த செயல் தீமையை, தீமையால் வெல்லாமல் நன்மையால் வெல்ல வேண்டும் என்ற வாழ்க்கை நெறியை கற்பிப்பதாக கூறுகிறது. அப்பொழுது சவுல் அரசன் தாவீதை பார்த்து, நீ என்னை பார்க்கிலும் நீதியுள்ள மனிதர் நீ எனக்கு நன்மை செய்தாய் நானோ உனக்கு தீமை செய்தேன் என்று சவுல் தாவீதிடம் கூறினார். இந்த நிகழ்வு தீமைக்கு பதிலாக நன்மை செய்ய வேண்டும் என்ற நற்பண்பை குறிக்கிறது.

பகைவருக்கும் அன்பு செய்ய வேண்டும் தன்னை கொடுமைப்படுத்திய சவுலை மன்னித்ததன் மூலம் மன்னிக்கும் மனப்பக்குவத்தையும், கடவுளுக்கு பயப்படும் பயத்தையும் தாவீது வெளிப்படுத்தினார். தாவீதின் இந்த செயல்கள் தீமையை நன்மையால் வெல்ல வேண்டும் என்ற இறைப்படியினையை இதயத்தில் ஏந்தி வாழ்ந்ததால் தாவீதை கர்த்தர் உயர்த்தி, இஸ்ரேல் நாட்டிற்கு அரசனாக முடிசூட்டினார்.

குட்டிச் செல்லங்களா! நீங்களும் உங்கள் வாழ்க்கையில் தாவீதைப்போல் தீமையான செயல்களோடு எதிர்த்துப் போராடாமல் தீமைக்கு நன்மை செய்து பிறரை மன்னிக்கும் குணத்தோடு இந்த சிறுவயதில் இருந்தே நீங்கள் வாழ கற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால் நம் ஆண்டவர் இயேசு கூறியிருக்கிறார்; உங்கள் சத்துருக்களையும் சிநேகியுங்கள் என்றார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

**மனப்பாட வசனம்: ரோமர் 12:9**

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக; தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்."

– சகோ. பீட்டர்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. தாவீது சவுலுக்கு செய்தது போல் நாம் என்ன செய்யவேண்டும்?
2. எதற்கு அடையாளமாக வானவில்லை வைத்தேன் என்று கர்த்தர் கூறினார்?
3. சிம்சோனின் பலம் எதில் இருந்தது?
4. சிம்சோனைப்போல நாம் செய்யக் கூடாத மற்றும் செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன?
5. ஈசாக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டபோது தந்தை ஆபிரகாம் சொன்ன பதில் என்ன?

# வானவில்



கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

பிள்ளைங்களா!! இந்த மாதம் நாம் வானவில்லை குறித்து படிக்கப் போகிறோம். கர்த்தர் வானவில்லை எந்த சமயத்தில் உண்டாக்கினார்? எதற்காக உண்டாக்கினார்? என்று படிக்கலாமா?. வாங்க படிக்கலாம்.

மனிதர்கள் பாவம் செய்து பூமியை பாவத்தினால் நிறைத்தார்கள். இந்த பாவம் கர்த்தருடைய பார்வைக்கு எட்டியபோது கர்த்தர் பூமியை அழிக்கும்படி திட்டம் செய்தார். இருந்தபோதிலும் கர்த்தருக்கு பயப்படுகிற மனிதனாக நோவா வாழ்ந்துகொண்டு இருந்ததால், கர்த்தர் நோவாவையும் அவனுடைய குடும்பத்தையும் காக்கும்படியாக கப்பலை கட்டும்படி சொன்னார். நோவாவும் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து முடித்தான். கர்த்தர் நோவாவையும் அவனுடைய குடும்பத்தாரையும் மற்றும் கப்பலுக்குள் இருந்த அனைத்து நிலவாழ் உயிரினங்களையும் கர்த்தர் பாதுகாத்தார்.

பூமியின் மேல் பெருவெள்ளம் உண்டாகி பூமி முழுவதையும் வெள்ளத்தால் நிறைத்தது. பூமியில் வாழ்ந்த அனைத்து உயிரினங்களும் அழிந்துபோனது, நோவாவும் அவனுடைய வீட்டாரும் மற்றும் கப்பலுக்குள் இருந்த உயிரினங்கள் மாத்திரமே உயிர் பிழைத்தது. நாற்பது நாள் பூமியின் மேல் பெருவெள்ளம் உண்டாகி பூமி முழுவதும் நீரால் நிரம்பி, கப்பல் நீரின் மேல் மிதக்கத் துவங்கினது.

பூமியில் இருந்த அனைத்து உயிரினங்களும் நீரினால் அழிந்த பிறகு, கர்த்தர் நோவாவையும், அவனோடு கப்பலுக்குள் இருந்த அனைத்து உயிரினங்களையும் நினைத்துப் பார்த்தார். பின்னர் பூமியில் இருந்த பெரு வெள்ளத்தை நிறுத்தினார். பூமி முழுவதும் நீரினால் நிறைந்திருந்தது. பூமியில் நிலப்பரப்பில் இருந்த நீர் வடிய நூற்றைம்பது நாட்கள் ஆனது. பூமியில் இருந்த நீர் வடிந்தது. பின்பு கர்த்தர் நோவாவை கப்பலில் இருந்து வெளியே புறப்படும்படி சொன்னார். பின்பு கர்த்தர் நோவாவோடும் உயிருள்ள அனைத்து உயிரினங்களோடும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துவதாக சொன்னார். அதாவது இனிமேல் எப்பொழுதும் பூமியை பெருவெள்ளத்தால் அழிப்பதில்லையென்றும், அதாவது நீரினால் இந்த பூமியை அழிப்பதில்லையென்று உடன்படிக்கை செய்தார். அந்த உடன்படிக்கையின் அடையாளமாக வானத்திலே என்னுடைய வில்லை அடையாளமாக வைப்பேன் என்று சொன்னார். அந்த வில் தான் வானவில், பூமியின் மேல் மேகத்தை வருவிக்கும்போதெல்லாம் அந்த வானவில் தோன்றும் என்று சொன்னார். அந்த வானவில் மேகங்களில் தோன்றும் போதெல்லாம் உங்களோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூறுவேன் என்று சொன்னார்.

பிரியமான செல்லபிள்ளைகளா! நம்முடைய உண்மையுள்ள கர்த்தர் நமக்காக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து இந்த உலகத்தை உண்டாக்கினார். இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொன்றும் நமக்கு கர்த்தரை ஞாபகப்படுத்துகிறது அல்லவா! இனிமேல் வானவில்லை பார்த்தால் நமக்கு கர்த்தரும் அவருடைய உடன்படிக்கையும் நினைவுக்கு வரும். அன்புள்ள செல்லப் பிள்ளைகளா! இனிமேல் நீங்கள் வானவில்லை பார்த்தால், கர்த்தர் தான் இந்த உலகத்தைப் படைத்தார் என்பதை ஞாபகம் வையுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக.

**மனப்பாட வசனம்: ஆதியாகமம் 9:13**

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாள மாயிருக்கும்."

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

சிறுவர் பகுதி

# சிம்சோனின் தவறான ஸ்நேகம்

கடவுளின் செல்லங்களா! எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா?

இப்பக்கூட சிம்சோனின் தவறான ஸ்நேகத்தையும், அதனால் ஏற்படும் விளைவையும் பார்க்கலாமா?

சிம்சோன் யார் தெரியுமா? அவர் ரொம்ப ரொம்ப பலசாலி! கடவுள் அவருக்கு நிறைய பலத்தைக் கொடுத்திருந்தாரு, இந்த பலத்தை நல்ல விஷயங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று கடவுள் சிம்சோனிடம் சொல்லியிருந்தார். ஆனால், சிம்சோன் என்ன செய்தார் தெரியுமா? அவர் தவறான நண்பர்களுடன் பழக ஆரம்பித்தார். ஒரு நல்ல நண்பர், நாம் நல்ல விஷயங்களைச் செய்யும்போது நம்மோடு இருப்பார். ஆனால், சிம்சோன் தேர்ந்தெடுத்த நண்பர்களோ, கெட்ட விஷயங்களை செய்யத் தூண்டினார்கள். அந்த நண்பர்களுக்கு, சிம்சோனின் பலம் அவருக்கு எங்கிருந்து வருகிறது என்று தெரிந்துக்கொள்ள ஆசை. அதனால், அவர்கள் ஒரு கெட்ட திட்டத்தை போட்டார்கள்.

அந்த நண்பர்கள் சிம்சோனிடம், உன் பலத்தின் ரகசியம் என்ன? என்று கேட்டார்கள், சிம்சோன் முதலில் சொல்ல மறுத்தார்.

ஆனால், தொடர்ந்து வற்புறுத்தியதால், அவர் உண்மையைச் சொல்லிவிட்டார். சிம்சோனின் பலம், அவருடைய தலைமுடியில்தான் இருந்தது. அதை யாரும் வெட்டக்கூடாது என்று கடவுள் சொல்லியிருந்தார்.

அந்த தவறான நண்பர்கள், சிம்சோன் தூங்கும்போது அவருடைய தலைமுடியை வெட்டிவிட்டார்கள். என்ன நடந்தது தெரியுமா? சிம்சோன் தன்னுடைய பலத்தை இழந்துவிட்டார். அதுமட்டும் அல்ல, அவருடைய கண்களையும் பறித்துவிட்டார்கள், அவர் ரொம்ப வேதனையோடு வருத்தப்பட்டார்.


இந்த சம்பவத்திலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளலலாம்?

**1. நல்ல நண்பர்களை தேர்ந்தெடுங்கள்:**

நீங்கள் நல்ல விஷயங்களைச் செய்ய உதவும் நண்பர்களோடு மட்டுமே பழக வேண்டும். உங்களிடம் தவறான விஷயங்களைச் செய்யச் சொல்லும் நண்பர்கள் நல்ல நண்பர்கள் அல்ல.

**2. ரகசியங்களை எல்லாரிடமும் சொல்லாதிருங்கள்:**

முக்கியமான விஷயங்களை யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதில் கவனமாக இருங்கள். தவறானவர்களிடம் சொன்னால், அது நமக்கு ஆபத்தாக மாறிவிடும்.



**3 . கடவுள் தந்த பலத்தை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும்:**

நமக்குக் கிடைத்த திறமைகளையும், பலத்தையும் நல்ல விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதுதான் நாம் செய்ய வேண்டியது குட்டீஸ்!

அதனால் குழந்தைகளா! நல்ல நண்பர்களோடு சேர்ந்து, நல்ல விஷயங்களை மட்டுமே செய்யுங்கள். அதுதான் நம்மை எப்போதும் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்கும். செய்வீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 119:63**

."உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன்"

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | M. ஜோனத்தான் | கரூர் |
| 2. | V. ஏஞ்சல் ஜோயன்னா | மதுரை |
| 3. | A. சுபிக்ஷா | பெருமாள் வலசு |
| 4. | A. சாம்குமார் | பெருமாள் வலசு |
| 5. | D. டேப்னி | சென்னை |
| 6. | D. ஜுனித்தா | சென்னை |
| 7. | A. ஹானா ஜோதிராணி | மதுரை |
| 8. | M. அபி பிலேமோன் | எழுகம்வலசு |
| 9. | J. நவீன் பீட்டர் | மதுரை |
| 10. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | மதுரை |
| 11. | S. ஜுடா லியோ | ரஸ்தா |
| 12. | G. ஜெர்லின் | ரஸ்தா |

சிறுவர் பகுதி

# ஈசாக்கு



ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

ஆபிரகாமிற்கும் அவர் மனைவியாகிய சாராளுக்கும் மிகவும் வயதான பிறகு மகன் பிறந்தான். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்கள். பிள்ளை வளர்ந்து சில காலங்களானபின்பு கர்த்தர் ஆபிரகாமை அழைத்தார். அவரிடம் "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்."

ஆபிரகாமும் கர்த்தர் சொன்னதுபோலவே அதிகாலையில் எழுந்து, கழுதையின்மேல் சேனங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும், தன் மகனையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு புறப்பட்டு போனான். மூன்று நாள் பிரயாணம் செய்து கர்த்தர் குறிப்பிட்டு சொன்ன அந்த இடத்தை வந்தடைந்தார். அப்போது ஆபிரகாம் தன்னுடன் வந்த வேலைக்காரரை அங்கே நிறுத்திவிட்டு, நீங்கள் இங்கே காத்திருங்கள் நானும் பிள்ளையும் அங்கே போய் தொழுதுகொண்டு வருவோம் என்றார்.

மேலும், ஆபிரகாம் தகனபலிக்குத் தேவையான கட்டைகளை எடுத்து, தன் மகன் ஈசாக்கின்மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு கர்த்தரால் குறிப்பிட்ட இடத்துக்கு போனார்கள், அவர்கள் போகையில் ஈசாக்கு தன் தகப்பன் ஆபிரகாமை நோக்கி: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்.

குறிப்பிட்ட அந்த இடத்தை அடைந்தவுடன் ஆபிரகாம் தகனபலிக்குத் தேவையான ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினார். பின்பு தன் மகனை வெட்டும்படி தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். அந்த நேரத்தில் கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து, ஆபிரகாமே! ஆபிரகாமே! என்று கூப்பிட்டு; பிள்ளையின்மேல் உன் கையைப் போடாதே, அவனை ஒன்றும் செய்யாதே என்றார்.

அந்த தூதன் மேலும், நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

குட்டீஸ்! பார்த்தீங்களா? கர்த்தர் கேட்டவுடனே ஆபிரகாம் தன் ஒரே பிள்ளையை அதுவும் தங்கள் முதிர்வயதில் பிறந்த பிள்ளையை பலியாக கொடுத்தார். ஆனாலும் கர்த்தர்மேல் இருந்த நம்பிக்கையால் (விசுவாசத்தினால்) தன் பிள்ளையை திரும்ப பெற்றுக்கொண்டான்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 3:6**

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்."

– சகோதரி. குயினி பிரதீப்

# செப்டம்பர் மாத கேள்விகள்

(**ரோமர்** புத்தகத்தில் இருந்து)



1) இடறுதற்கான கல் எங்கே வைக்கப்பட்டுள்ளது?

2) நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறவர் யார்?

3) யார் இல்லாவிட்டால் கர்த்தரைக் குறித்து கேள்விப்பட மாட்டார்கள்?

4) எதை அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் அழகானவைகள்?

5) விசுவாசம் எதினாலே வரும்? கேள்வி எதினாலே வரும்?

6) கீழ்ப்படியாதவர்களும், எதிர்த்துப் பேசுகிறவர்களும் யார்?

7) பாகாலுக்கு முழங்காற்படியிடாத எத்தனைபேர் மீதியாக வைக்கப்பட்டனர்?

8) ஒலிவமரத்தின் கிளைகள் இருந்த இடத்தில் ஒட்ட வைக்கப்பட்டது எது?

9) தேவனுடைய வழிகள் எப்படிப்பட்டவைகள்?

10) நாம் நம் சரீரங்களை எப்படிப்பட்ட ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-10-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

1. ரோமர் 7:7
2. ரோமர் 7:11
3. ரோமர் 7:19
4. ரோமர் 7:25
5. ரோமர் 8:1
6. ரோமர் 8:3
7. ரோமர் 8:5
8. ரோமர் 8:12
9. ரோமர் 8:18
10. ரோமர் 8:26

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
2) J. ஜான்சி - ஆனைமலை
3) S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
4) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
5) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
6) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
7) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
8) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
9) M. ஈஸ்வரி முருகன் - கரூர்
10) M. ராஜா - கரூர்
11) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
12) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
13) D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
14) S. ஜெபமணி - தென்காசி
15) S. ஆலன் காலேப் - ராணிபேட்டை
16) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
17) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
18) R. ஞானசிரோன்மணி - மதுரை
19) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
20) Mr. டேவிட் ராஜ் - அனவரதநல்லூர்
21) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
22) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
23) A. லலிதா - புதுக்கோட்டை
24) Mrs. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
25) Mrs. R. சரோஜா - தென்கலம்
26) A. அரவிந்த் - மதுரை
27) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
28) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
29) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
30) P.S. ருக்மணி - ஈரோடு
31) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
32) M. அன்பழகன் - தங்கமேடு
33) Mrs. J. பூங்கொடி - முத்தூர்
34) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
35) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
36) S. பாக்கியராஜம் - மதுரை
37) Mrs. ராணி குமரன் - கரூர்
38) Mrs. J. ஜெயராணி ஜான் - மதுரை
39) N. ஜான் செல்லையா - மதுரை
40) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
41) Mrs. சூரிய பிரியா - மதுரை
42) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
43) P. ஷைனி - காங்கேயம்
44) S. கார்த்திக் - கரூர்
45) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
46) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
47) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
48) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
49) Mr. ராஜன் - மதுரை
50) Mr. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
51) Mr. தமிழரசன் - நாமக்கல்
52) M. பியூலா சாந்தி - ஈரோடு
53) Mrs. மேரி ராஜ் - மதுரை
54) S. டேவிட் சாந்தகுமார் - வல்லம்
55) A. ரோஸ்மேரி - சென்னை
56) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
57) V. மைனாவதி வசந்த் - தங்கமேடு
58) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
59) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
60) Mrs. ஜெயந்தி செல்வகுமாரி - தரங்கம்பாடி


தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th September 2025**
**Posted at Arasaradi HPO on 10th & 11th September2025**

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்












அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







## கைபிரதிகள்








உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers